# உள்ளடக்கம்


1. நோக்கு
2. செயற்பணி
3. தொழிற்பாடுகள்
4. உற்பத்தியளவு
5. பதவியணி
6. தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம்
7. பயிற்சியளித்தல் மற்றும் திறன் விருத்தி
8. சேவையினை மேம்படுத்துதல்
9. 2014 ஆம் ஆண்டினுள் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள்
10. 2014 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அறவிடப்பட்ட அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்
11. வருமானப் பகுப்பாய்வு - 2014
    I. வருமானம் - 2014
    II. வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்துதல் -2014
12. செலவினப் பகுப்பாய்வு - 2014
    I. மீண்டுவரும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம்
    II. நிதி மூலங்கள்
13. வருமான மற்றும் செலவினப் பகுப்பாய்வு
14. அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு - 29601

இணைப்பு 01- அமைப்புமுறை அட்டவணை

# இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்

## 1. நோக்கு

சிறந்த எதிர்காலத்தின் பொருட்டு சூழலையும் மக்களையும் பாதுகாத்தல்.

## 2. செயற்பணி

நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், மக்கள் சுகாதாரம், சூழல் பாதுகாப்பு போன்றவற்றைக் கவனத்திலெடுத்து, பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சம்பந்தமாக அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் எடுக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களை 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்துதல்.

## 3. தொழிற்பாடுகள்

- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடு சம்பந்தமான அரசாங்கத்தின் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.
- இறக்குமதி ஏற்றுமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு உட்பட்டு இறக்குமதியையும் ஏற்றுமதியையும் கட்டுப்படுத்துதல்.
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் சம்பந்தமான விடயங்களின் போது சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் அன்னியச் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கும் ஒத்துழைத்தல்
- வணிக வங்கிகளுக்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் சம்பந்தமான செயற்பாட்டு ஆலோசனைகளை வழங்குதல்.

## 4. உற்பத்தியளவு

- நாட்டுக்கும் பொருளாதாரத்திற்கும் சார்பான விதத்தில் 2014 ஆம் ஆண்டினுள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு 13468 அனுமதிப் பத்திரங்களை வழங்கி திணைக்களத்தின் செயற்பணியை நிறைவேற்றுதல்.
- இறக்குமதி அனுமதிப் பத்திரத்திற்கு அமைவாக பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளனவா என்பதைப் பற்றிய உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொண்ட பின்னர் 17457 பற்று வைத்தல்களின் மூலம் இறக்குமதிக் கட்டுப்பாட்டை முறைப்படுத்துதல்.
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுக் கொள்கையின் அடிப்படையில் அன்னியச் செலாவணி செலவாகாது என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற இறக்குமதிகளுக்காக அனுமதியளித்தல்.
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் சம்பந்தமாக சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் அன்னியச் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கும் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடு சம்பந்தமாக வணிக வங்கிகளுக்கு செயற்பாட்டு ஆலோசனைகளை வழங்குதல்.
- அனுமதிப் பத்திரங்களை வழங்கியதன் மூலம் பெறப்பட்ட கட்டணமாக ரூபா 751 மில்லியன் வருமானமொன்றைத் திரட்டி அரசாங்கத்தின் இணைந்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.
- புதிய கணினி நிகழ்ச்சித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தி கணினித் தொகுதியை நவீனமயப்படுத்தல். புதிய கணினி மற்றும் துணைப் பாகங்களைத் தாபிப்பதன் மூலம் புதிய தகவல் களஞ்சியத் தொகுதியையும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரங்களை வழங்கும் முறையான கணினித் தொகுதியொன்றைத் தாபித்தல்.

## 5. பதவியணி

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், பற்று வைத்தல் மற்றும் வருமானங்களைத் திரட்டுதல் போன்ற பணிகளும் அதேபோன்று பொதுவான அலுவலக நிருவாக நடவடிக்கைகள், கொள்கைகள் மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகளுக்காக பின்வரும் நிரந்தரப் பதவியணியின் சேவை பெற்றுக் கொள்ளப்படுகின்றது. (அட்டவணை இலக்கம் 01)

இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் சேவைகளை அதிகூடிய செயற்திறனுடன் மேற்கொள்வதற்கும், சேவைநாடிகளுக்கு வினைத் திறன்மிக்கதும் செயற்திறன்மிக்கதும் நட்பான சேவையை வழங்குவதற்கும் இந்தப் பதவியணி வருடம் முழுவதும் பொறுப்புடன் ஒற்றுமையாக செயற்பட்டுள்ளனர்.

2014.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான பதவியினர்

அட்டவணை இலக்கம் 01

| தொடர் இல. | பதவிப்பெயர், சேவை மற்றும் வகுப்பு | அனுமதிக்கப்பட்ட பதவியினர் | உண்மையான பதவியினரின் எண்ணிக்கை | வேறுபாடு/ மிகை/ வெற்றிடம் |
|---|---|---|---|---|
| 01 | சிரேட்ட நிலை | 09 | 06 | 03 |
| 02 | மூன்றாம் நிலை | 02 | 02 | - |
| 03 | இரண்டாம் நிலை | 68 | 62 | 06 |
| 04 | ஆரம்ப நிலை | 19 | 19 | - |
| 05 | ஏனையவை - அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | - | - | - |
| | மொத்தம் | **98** | **89** | **09** |

## 6. தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைக்காக கணினி நிகழ்ச்சித் திட்டமொன்றை தயாரிப்பதன் மூலம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உட்பட்டுள்ள விடயங்களுக்காக அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதனைத் துரிதப்படுத்துவதற்காகவும் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதாவது, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு எடுக்கின்ற காலத்தை சுமார் 03 மணித்தியாலத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ள அதேவேளையில், அந்த அனுமதிப் பத்திரங்களை பற்றுவைக்கு நடவடிக்கைகளை ½ மணித்தியாலத்திற்குள் மேற்கொள்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

கணினி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அனுமதிப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கையின் சகல கட்டங்களையும் பதிவுசெய்துகொள்வதினூடாக இலகுவாக தரவுகளைப் பரிமாற்றிக் கொள்ளுதல் மற்றும் அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றை மேற்கொள்ள முடியும். காலத்திற்கு ஏற்ப தேவைப்படுகின்ற அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளுதல், வருமான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளுதல், மேலதிகக் கட்டணம் அறவிடல் சம்பந்தமான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளுதல், வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் பற்றுவைக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை சம்பந்தமான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளுதல் என்பன இதன் மூலம் இலகுபடுத்தப்பட்டுள்ளது.

சரியாகவும் துரிதமாகவும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் கணினித் தொகுதியை அறிமுகப்படுத்துவதினூடாக முன்னர் காணப்பட்ட செயன்முறைகள் மிகவும் நம்பகரமானதாகவும் செயற்திறன்மிக்கதாகவும் காணப்படுகின்றது. அதேபோன்று அனுமதிப் பத்திரத்திற்கான கொடுப்பனவு நடவடிக்கைகள் துரிதமடைந்துள்ள அதேவேளையில், மேலதிகக் கட்டணம், அனுமதிப் பத்திரக் கட்டணம் ஆகியவற்றை அறவிடும் முறையும் இலகுபடுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் தொகுதியன் மூலம் இலங்கைச் சுங்கத் திணைக்களம், மதுவரித் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது பரிந்துரைகளை வழங்குகின்ற ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் இணைய வழியாக தொடர்புகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 7. பயிற்சியளித்தல் மற்றும் திறன் விருத்தி

திணைக்களத்தின் அலுவலர்களின் அறிவு மற்றும் மனப்பாங்குகளை விருத்தி செய்து சேவைகளை வழங்குவதனை அதிகூடிய செயற்திறனுடனும் உற்பத்தித்திறனுடனும் பேணுவதற்காக 2014 ஆம் ஆண்டினுள் பின்வரும் விதமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிக்காக அலுவலர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

### <u>உள்நாட்டுப் பயிற்சி</u>

I. பதவி நிலை அலுவலர்கள்

- Capacity Building Programme for the officers of Sri Lanka Administrative Service (SLAS Class – I) - 01
- Training On “Programme Global Shield” - 02

II. முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அலுவலர்கள்

- மொழிப் பயிற்சி, நிருவாக மற்றும் நிதி முகாமைத்துவக் கற்கைநெறி -12
- கணினிக் கற்கை நெறி -01
- Certificate Course in Logistic Service, Freight Forwarding & Multimodal Transport -02

III. முழுமையான பதவியினர்

- இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நிதி ஒழுங்குவிதிகள், சர்வதேசப் போக்குவரத்து மற்றும் ஏனைய வெளிநாட்டு வர்த்தகம் சம்பந்தமான கொள்கைகளைப் பற்றி அறிவூட்டும் செயலமர்வுகள்

## உள்நாட்டுப் பயிற்சி

| அலுவலரின் பெயர் | பயிற்சிக் கற்கைநெறி |
|---|---|
| திரு.டீ.எஸ்.பி.சேனாரத்ன - கட்டுப்பாட்டாளர் நாயகம் | 1. Thematic Meeting related to phase – Out of HCFCs - Thailand |
| திரு.கே.என.கே. வித்தியாலங்கார - உதவிக் கட்டுப்பாட்டாளர் | 1. Foreign Training related to MHRM degree in University of Kelaniya (University Putra Malaysia) |

## 8. சேவைகளை மேம்படுத்துதல்

சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு திணைக்களத்தினால் இதுவரையில் பல்வேறு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டுள்ளன. நிறுவனக் கட்டமைப்பை மாற்றுதல், கணினி நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தல், பயிற்சி வாய்ப்புக்களுக்காக அனுப்புதல் ஆகியவற்றினூடாக செயற்திறன்மிக்கதும் உற்பத்தித்திறன்மிக்கதுமான சேவையொன்றை சேவைநாடிகளுக்கு வழங்குதல் என்பன அதில் பிரதானமானதாகும்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திர மாதிரிப் படிவத்தை மேம்படுத்துவதன் மூலம் தேவையான தகவல்களை சரியாகப் பெற்றுக் கொள்ளுதல், சேவைநாடிகளுக்கு தேவையான தகவல்களை வழங்குவது இலகுபடுத்தப்படுவதுடன் ஒழுங்கீனங்களைத் தவிர்க்கும் பொருட்டு அனுமதிப் பத்திரத்தினுள் பல்வேறு பாதுகாப்பு நுட்பமுறைகளின் பயன்பாடும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பற்றுப் மாதிரிகளை மேம்படுத்துவதன் மூலம் நுகர்வோருக்கு துரிதமாக தகவல்களை பரீட்சிக்கக் கூடியதாக இருத்தல், அதேபோன்று சுங்கத் திணைக்களத்திடமிருந்து இறக்குமதிப் பொருட்களை விடுவித்துக் கொள்ளும் பணியும் இலகுபடுத்தப்பட்டுள்ளது.

புதிய சேவைக் கருமபீடத்தைத் திறப்பதன் மூலம் நுகர்வோருக்கு இலகுவானதும் துரிதமானதுமான சேவையொன்றை வழங்கக் கூடியதாக இருக்கின்றது. நுகர்வோருக்கு வழங்கும் சேவையை மேம்படுத்துவது சம்பந்தமாக பின்வரும் விடயங்களை திணைக்களம் கடந்த வருடத்தினுள் நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது.

பொது மக்களின் வாழ்க்கைக்கு அத்தியவசியமான உணவு மற்றும் குடிபான வகைகளை இலங்கைத் தர நிர்ணயம் மற்றும் குறித்தொதுக்கல் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு இறக்குமதி செய்வது சம்பந்தமாக தரநிர்ணயத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் பொது மக்கள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துகின்றது. அதாவது மக்கள் வாழ்க்கைக்கு நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்ற சேவைகள் தொடர்பில் விசேட நடவடிக்கையொன்றாக இறக்குமதி

செய்யப்படும் மருந்துகள் நாட்டுக்குள் கொண்டுவரப்படும் போது மொத்த ஆயுட் காலத்தில் குறைந்தபட்சம் ¾ ஆயுட் காலம் எஞ்சியிருக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ள அதேவேளையில், சந்தையில் காலாவதியடைந்துள்ள மருந்துகளை சுகாதார அமைச்சுடன் இணைந்து அழித்துவிடுவதற்கு அல்லது மீள் ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

சூழலுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்ற உக்காத கழிவுகளை அகற்றுவது சம்பந்தமாக சூழல் அமைச்சின் கழிவு முகாமைத்துவ அலகின் ஒத்துழைப்புடன் அந்தக் கழிவுகளை அகற்றுவது முறைப்படுத்தப்பட்டுள்ளது.

சூழலுக்கும் மக்கள் சுகாதாரத்திற்கும் பாதிப்பாக இருக்கக்கூடிய இறக்குமதியாகிய பயன்படுத்தப்பட்ட CFL மின்குமிழ் / குளிர்சாதனப் பெட்டி/ ஆழ் உறை குளிர்சாதனப் பெட்டி/ குளிரூட்டி போன்ற இறக்குமதிகள் இறக்குமதி அனுமதிப் பத்திரக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டது. இலங்கை அரசாங்கத்தினால் உடன்பட்டுள்ள விதமாக மொன்ட்ரியல் உடன்பாட்டுக்கு இணங்கியதாகச் சென்று வாயு மண்டலத்தில் ஓசோன் படலத்திற்கு உராய்வை ஏற்படுத்தக் கூடிய வாயுக்களை வெளியிடுவதனைத் தவிர்த்தல். அவ்வாறில்லையானால் கட்டுப்படுத்துதல் இதன் பிரதான நோக்கமாகும்.

இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டின் பொருட்டு பயன்படுத்தப்பட்ட கணினி இயந்திரம், சலவை இயந்திரம் மற்றும் தொலைக்காட்சி என்பன இறக்குமதி அனுமதிப் பத்திரக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டது. அதன் மூலம் இலத்திரனியல் கழிவுகள் நாட்டுக்குள் கொண்டுவரப்படுவதைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்தது.

மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கவனத்திலெடுக்கும் போது, சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு எடுக்கப்பட்ட நேரடியானதும் மறைமுகமானதுமான நடவடிக்கைகளை அடையாளப்படுத்தக் கூடியதாக இருக்கின்ற அதேவேளையில், அதன் மூலம் நாட்டின் வர்த்தக சமூகத்திற்கும் அதேபோன்று பொது மக்களுக்கும் சமமாகவும் பக்கச்சார்பின்றியும் திணைக்களம் என்ற வகையில் நிறைவேற்ற வேண்டிய சேவைகளை உற்பத்தித்திறனுடனும் செயற்திறனுடனும் சரியாகவும் நிறைவேற்றுவதற்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

## 9. 2014 ஆம் ஆண்டினுள் வெளியிடப்பட்ட புதிய ஒழுங்குவிதிகள்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பற்றிய அரசாங்கத்தின் கொள்கையை நடைமுறைப்படுத்தி புதிய ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கு பின்வரும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

அட்டவணை இலக்கம் 02

| அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்ட திகதி | அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் | உள்ளடக்கம் |
|---|---|---|
| 2014.01.04 | 1844/49 | இறக்குமதிப் பொருட்கள் 123 இனை SLSI பரிந்துரைக்கு உட்படுத்துதல். |
| 2014.02.21 | 1846/16 | பயணிகள் போக்குவரத்து மற்றும் பொருட்களைக் கொண்டுசெல்லும் மோட்டார் வாகனங்களின் இயைபுமுறைக் குறியீட்டு இலக்கங்களின் திருத்தங்கள் |
| 2014.01.02 | 1843/40 | கருவாவுக்கான தரநிருணயம் மற்றும் குறித்தொதுக்கல்களைப் பரீட்சிக்கும் காலத்தை நீடித்தல். |
| 2014.07.21 | 1872/5 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரம் மற்றும் அது தொடர்பான பற்றுப் பத்திரங்களைத் திருத்துதல். |

| | | |
|---|---|---|
| 2014.10.02 | 1882/40 | இயைபுமுறைக் குறியீட்டு இலக்கம் 03.02, 03.02.89, 03.03 மற்றும் 03.03.89 இலங்கைக்குள் லின்னா மீன் இறக்குமதி செய்வதனை முழுமையாகத் தடைசெய்தல். |
| 2014.09.30 | 1882/5 | பேற்றோலிய உற்பத்தியின் கீழ் பெட்ரல், டீசல், மண்ணெண்ணெய், விமானத்திற்கான எண்ணெய் மற்றும் தார் சம்பந்தமான இறக்குமதி அனுமதிப் பத்திரக் கட்டணத்தைத் திருத்துதல். |
| 2014.10.10 | 1883/16 | இயைபுமுறைக் குறியீட்டு இலக்கம் 0701.90 இன் கீழ் புதிய அல்லது குளிரூட்டப்பட்ட உருளைக் கிழங்கு இறக்குமதியை இடைநிறுத்தல். |
| 2014.10.24 | 1885/50 | ஒரு சில மோட்டார் வாகனங்கள் சம்பந்தமான இயைபுமுறைக் குறியீட்டு இலக்கங்களை திருத்தத்திற்கு உட்படுத்துதல் |

## 10. 2014 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அறவிடப்பட்ட அனுமதிப் பத்திரக் கட்டணம்

அட்டவணை இலக்கம் 03

| இல | விபரம் | குறியீட்டு இலக்கம் | அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | அனுமதிப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|---|
| **அலகு 01 - மருந்துகள்** | | | | |
| 1 | மேற்கத்தேய மருந்து | 400 | 1843 | 115,822,891.01 |
| 2 | கால்நடை | 410 | 335 | 4,063,292.71 |
| 3 | ஆயுர்வேத | 420 | 114 | 554,697.66 |
| 4 | ஹோமியோபத்தி | 430 | 09 | 8,956.26 |
| 5 | சத்திர சிகிச்சை உபகரணம் | 450 | 199 | 4,101,353.91 |
| **உப மொத்தம்** | | | **2500** | **124,551,191.55** |
| **அலகு 02 - வாகனங்கள்** | | | | |
| 6 | அன்னியச் செலாவணியை சம்பாதிப்பதன் அடிப்படையில் | 100 | 29 | 3,107,917.70 |
| 7 | வெளிநாட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் பரிசு | 110 | - | - |
| 8 | வெளிநாட்டவர்களினால் இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் | 120 | - | - |
| 9 | தூதரக அலுவலகங்கள் | 130 | 2 | 5,923.00 |
| 10 | அங்கவீனர்களுக்கான பரிசுகள் | 140 | 3 | 126,829.50 |
| 11 | சமூக சேவை அமைப்புக்களின் பரிசுகள் | 150 | 22 | 963,669.81 |
| 12 | வதிவிட வெளிநாட்டவர்கள் | 160 | 3 | 8,035.75 |
| 13 | புனித ஸ்தளங்களுக்கான வாகன இறக்குமதி | 170 | 45 | 5,199,620.04 |
| 14 | விசேட பணி இயந்திரம் | 180 | 38 | 3,585,947.70 |
| 15 | ஏற்றுமதி மேம்பாட்டுக்கான தற்காலிக இறக்குமதி | 190 | - | - |
| 16 | பிரேத வண்டி | 200 | 18 | 1,109,999.95 |
| 17 | விமானத்திற்கான / ஹெலிகொப்டருக்கான உதிரிப் பாகங்கள் | 210 | 52 | 1,520,670.29 |
| 18 | இயந்திரம் | 220 | 2 | 19,883.55 |
| 19 | கெபின் | 230 | 55 | 89,958,795.63 |
| 20 | பொடிஷெல் | 235 | 13 | 144,307.34 |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் | 240 | 24 | 169,999.90 |
| 22 | நானாவித | 250 | 129 | 22,763,308.23 |
| 23 | தூதரக சேவை அலுவலர்கள் இறக்குமதி செய்கின்ற வாகனங்கள் | 260 | 53 | 314,083.29 |
| 24 | கனரக வாகனங்கள் | 270 | 184 | 23,052,581.48 |
| 25 | கனரக வாகனங்கள் (LC Permit) | 275 | 5 | 22,712.55 |
| 26 | வாகன உதிரிப் பாகங்கள் | 280 | 91 | 907,834.37 |
| 27 | டயர் | 285 | 3 | 7,125.49 |
| 28 | செசி | 290 | 19 | 2,786,998.61 |
| 29 | ஆசனம் | 320 | 168 | 3,945,548.87 |
| 30 | பரிசீலனை செய்யும் போதான நிபந்தனைகளுக்கு இணங்காமை | 321 | - | - |
| **உப மொத்தம்** | | | **958** | **159,721,793.05** |

| இல. | விபரம் | குறியீட்டு இலக்கம் | அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | அனுமதிப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|---|
| **அலகு 03 - இரசாயணப் பொருட்கள்** | | | | |
| 31 | இரசாயணப் பொருட்கள் | 500 | 976 | 5,688,730.15 |
| 32 | பெற்றோலிய உற்பத்திகள் | 510 | 946 | 245,353,270.64 |
| 33 | களைக் கொல்லி | 520 | 1237 | 25,431,397.58 |
| 34 | கதிரியக்கப் பொருட்கள் | 530 | 87 | 290,106.13 |
| 35 | மதுசாரம் | 540 | 277 | 4,350,236.61 |
| 36 | விலங்கு உற்பத்தி | 550 | 717 | 7,596,384.25 |
| 37 | தானியம் | 570 | 96 | 10,216,993.19 |
| **உப மொத்தம்** | | | **4339** | **298,927,118.55** |
| **அலகு 04 - தொலைத் தொடர்பு உபகரணங்கள் மற்றும் ஏனையவை** | | | | |
| 38 | சிகரட் கடதாசி | 670 | 43 | 452,142.00 |
| 39 | கணினி | 625 | 215 | 10,818,782.69 |
| 40 | குளிரூட்டல் வாயு வகை | 640 | 41 | 152,750.11 |
| 41 | அச்சு இயந்திரம் மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரம் | 690 | 160 | 492,158.30 |
| 42 | தூரக் கட்டுப்பாட்டு விளையாட்டுப் பொருட்கள் | 660 | 126 | 132,290.28 |
| 43 | தொடர்பாடல் உபகரணம் மற்றும் செல்லிடத் தொலைபேசிகள் | 620 | 2859 | 44,083,303.38 |
| 44 | குளிரூட்டி இயந்திரம்,பயன்படுத்தப்பட்ட குளிர்சாதன மற்றும் ஆழ் உறை குளிர்சாதனப் பெட்டி | 630 | 42 | 208,797.18 |
| 45 | பயன்படுத்தப்பட்ட சலவை இயந்திரங்கள் | 635 | 32 | 728,531.05 |
| 46 | காலநிலை பலூண் | 695 | 5 | 832,274.00 |
| **உப மொத்தம்** | | | **3523** | **57,901,028.99** |
| **அலகு 05 - நானாவித இறக்குமதி மற்றும் ஏற்றுமதி** | | | | |
| 47 | விமானத்திற்கான உதிரிப் பாகங்கள் | 210 | 51 | 173,292.08 |
| 48 | மதுசாரம் | 540 | 64 | 532,480.00 |
| 49 | விலங்கு மற்றும் விலங்கு உற்பத்தி | 550 | 471 | 447,154.00 |
| 50 | தேயிலை | 570 | 477 | 6,991,398.00 |
| 51 | இரசாயணப் பொருட்கள் மற்றும் களைக் கொல்லி | 500 | 47 | 369,882.90 |
| 52 | இரசாயணப் பொருட்கள் கிருமி நாசினி மற்றும் | 520 | 74 | 1,126,082.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | விவசாய இரசாயண களைக் கொல்லி | | | |
| 53 | காசு | 610 | 06 | 40,044.65 |
| 54 | வெடி பொருட்கள் மற்றும் ஆயுதங்கள் | 600 | 136 | 1,483,506.00 |
| 55 | உலோகத் துண்டு, சிதைவுகள் மற்றும் ஏனையவை | 715 | 139 | 247,348.30 |
| 56 | உலோகச் சிதைவுகள் | 710 | 128 | 5,747,230.00 |
| 57 | நானாவித | 250 | 04 | 154,272.90 |
| 58 | பெற்றோலிய மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் | 510 | 55 | 235,618.30 |
| 59 | மர எண்ணெய் | 700 | 415 | 207,500.00 |
| 60 | பயன்படுத்தப்பட்ட ஆடைகள் | 720 | 74 | 1,774,635.00 |
| 61 | விளையாட்டுப் பொருட்கள் | 650 | 07 | 457,468.70 |
| 62 | தொடர்பாடல் உபகரணம் மற்றும் செல்லிடத் தொலைபேசிகள் | 620 | 271 | 816,782.50 |
| 63 | கிழிக்கப்பட்ட மரத்தின் பகுதிகள் | 602 | 17 | 17,600.00 |
| 64 | பயன்படுத்தப்பட்ட தளபாடங்கள் | 680 | 82 | 7,582,560.00 |
| 65 | அகற்றப்பட்ட சிலிண்டர் | 640 | 02 | 2,000.00 |
| 66 | பிளாஸ்டிக் சாப்பாட்டுப் பெட்டி | 730 | 05 | 5,544.53 |
| 67 | கதிரியக்கப் பொருட்கள் | 530 | 02 | 2,000.00 |
| **உப மொத்தம்** | | | **2148** | **28,414,399.86** |
| **முழு மொத்தம்** | | | **13468** | **669,515,532.00** |

## 11. வருமானப் பகுப்பாய்வு - 2014

திணைக்களமானது, 2014 ஆம் ஆண்டில் ரூபா 751 மில்லியன் வருமானத்தைச் சம்பாதிக்கக் கூடியதாக இருந்துள்ளது. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் 63% சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அது பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அனுமதிப் பத்திர வருமானம் - ரூபா. 669,515,532.00

மேலதிகக் கட்டணம் - ரூபா. 80,864,017.00

திருத்தப்பட்ட கட்டணம் - ரூபா. 1,126,767.00

### I. வருமானம் - 2014

வருமானம் சம்பந்தமான விபரம் அட்டவணை 03 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை இலக்கம் 04

| விபரம் | 2013 உண்மை வருமானம் ரூபா. | 2014 அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2014 திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2014 உண்மை வருமானம் ரூபா. |
|---|---|---|---|---|
| இறக்குமதி ஏற்றுமதி அனுமதிப் பத்திரக் கட்டணம் | 458,372,095 | 600,000,000 | 700,000,000 | 751,552,566,055 |

### II. வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்தப்பட்டது - 2014

அட்டவணை இலக்கம் 05

| விபரம் | தொகை ரூபா. |
|---|---|
| திருப்பிச் செலுத்தல் - இறக்குமதி ஏற்றுமதி அனுமதிப் பத்திரக் கட்டணம் | 100,699.63 |

## 12. செலவினப் பகுப்பாய்வு - 2014

### I. மீண்டுவரும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம்

2014 ஆம் ஆண்டுக்காக ரூபா 54.83 மில்லியன் மீண்டுவரும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரூபா 54.40 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அது மொத்த ஏற்பாட்டில் 99.22% ஆகும். விபரங்கள் அட்டவணை இலக்கம் 06 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

தலைப்பு இலக்கம் : 296

அமைச்சு : நிதி அமைச்சு - இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

நிகழ்ச்சித் திட்ட இலக்கம் : 01

கருத்திட்டம் : 01

அட்டவணை இலக்கம் 06

| விபரம் | 2013 உண்மை செலவினம் ரூபா. | 2014 அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2014 திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2014 உண்மை செலவினம் ரூபா. | ஏற்பாட்டின் பயன்பாடு % |
|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும்** | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 25,767,491 | 2,990,000 | 31,685,000 | 31,537,653.29 | 99.53% |
| ஏனைய மீண்டுவரும் | 12,503,633 | 15,820,000 | 14,606,000 | 14,446,621.47 | 98.91% |
| மீண்டுவரும் செலவினத்தின் மொத்தம் | 38,271,124 | 45,720,000 | 46,291,000 | 45,984,274.76 | 99.34% |
| | | | | | |

| மூலதனம் | | | | | |
|---|---|---|---|---|---|
| 2001 - கட்டட நிர்மாணம் | - | - | - | - | - |
| 2003 - வாகனங்கள் | 27,816 | 300,000 | 300,000 | 181,948 | 60.65% |
| 2102 - மரத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 4,399,348 | 4,000,000 | 7,561,693 | 7,591,692 | 99.99% |
| 2401 - பயிற்சியளித்தல் மற்றும் திறன் விருத்தி | 175,000 | 500,000 | 679,000 | 679,000 | 100% |
| மூலதனச் செலவு மொத்தம் | 4,602,164 | 4,800,000 | 8,540,693 | 8,422,640.38 | 98.61% |
| முழு மொத்தம் | 42,873,288 | 50,520,000 | 54,831,693 | 54,406,915.14 | 99.22% |

### II. நிதி மூலங்கள்

இணைந்த நிதியத்தின் மூலம் உள்நாட்டு நிதியத்தின் கீழ் ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்ட தொகையை செலவிடும் போது வினைத்திறனுடனும் உற்பத்தித் திறனுடனும் செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ( அட்டவணை இலக்கம் 07)

அட்டவணை இலக்கம் 07

| விபரம் | 2013 உண்மை செலவினம் ரூபா. | 2014 அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2014 திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2014 உண்மை செலவினம் ரூபா. |
|---|---|---|---|---|
| இணைந்த நிதியம் 11 - உள்நாட்டு நிதியம் | 42,873,228.00 | 50,520,000.00 | 54,831,693.00 | 54,406,915.14 |
| முழு மொத்தம் | 42,873,228.00 | 50,520,000.00 | 54,831,693.00 | 54,406,915.14 |


## 13. வருமான மற்றும் செலவினப் பகுப்பாய்வு - 2014

திணைக்களத்தினால் ரூபா 54 மில்லியன்களை செலவிட்டு ரூபா 751 மில்லியன் வருமானத்தைச் சம்பாதித்துள்ளது. அது அட்டவணையின் மூலம் காட்டப்பட்டுள்ளது. (அட்டவணை இலக்கம் 08)

அட்டவணை இலக்கம் 08

| மாதம் | வருமானம் (ரூபா) | செலவினம் (ரூபா) |
|---|---|---|
| சனவரி | 81,438,145.60 | 3,390,242.18 |
| பெப்ரவரி | 42,328,894.89 | 4,434,338.53 |
| மார்ச் | 62,101,307.99 | 3,769,153.78 |
| ஏப்ரல் | 47,055,022.45 | 3,708,222.82 |

| | | |
|---|---:|---:|
| மே | 62,563,708.69 | 5,927,136.05 |
| ஜுன் | 60,067,467.28 | 3,970,057.40 |
| ஜுலை | 60,042,182.39 | 3,893,004.94 |
| ஆகஸ்ட் | 62,087,471.29 | 4,406,153.43 |
| செப்டெம்பர் | 69,376,487.61 | 7,323,406.94 |
| ஒக்டோபர் | 52,647,747.38 | 4,689,396.15 |
| நவம்பர் | 63,831,988.54 | 3,783,870.54 |
| டிசம்பர் | 88,012,142.47 | 5,111,932.38 |
| **மொத்தம்** | **751,552,566.55** | **54,406,915.14** |




## 14. அரசாங்க அலுவலர்களின் முற்பண பீ கணக்கு - 29601


2014 ஆம் ஆண்டினுள் இந்தத் திணைக்களத்தின் அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கை அனுமதிக்கப்பட்ட எல்லையின் கீழ் பேணப்பட்டுள்ளது. ( அட்டவணை இலக்கம் 09)

தலைப்பு இலக்கம் : 296

அமைச்சு : நிதி அமைச்சு - இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

அட்டவணை இலக்கம் 09

| விபரம் | 2013 உண்மைச் செலவு | 2014அனுமதிக்கப்பட் மதிப்பீடு | 2014 திருத்தப்பட்ட மதிப்பீடு | 2014 உண்மைச் செலவு |
|---|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 11,929,263.50 | | | 12,783,664.00 |
| கூட்டப்பட்டது :- | | | | |
| வருடத்தின் மொத்தப் பற்று | 1,530,266.00 | 4,000,000.00 | | 3,354,428.00 |
| கூட்டப்பட்டது :- | | | | |
| மாற்றல் | 2,283,738.50 | | | 2,195,304.50 |
| மொத்தம் | 15,743,268.00 | | | 18,333,396.50 |
| கழிக்கப்பட்டது:- | | | | |
| வருடத்தின் மொத்தப் பற்று | 2,202,514.00 | 2,000,000.00 | | 2,367,557.00 |
| கழிக்கப்பட்டது:- | | | | |
| மாற்றல் | 757,090.00 | | | 1,582,792.00 |
| இறுதிப் பற்று மீதி | 12,783,664.00 | | | 14,383,047.50 |




| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Controller General | - 01 | Accountant | - 01 | H Clerk : Head Clerk (MA) | - 07 | ITA : Information Technology Assistant | - 01 |
| Import and Export Controller | - 01 | AO : Administrative Officer | - 01 | MA : Management Assistant | - 46 | DMA : Data Management Assistant | - 01 |
| AC : Assistant Controller | - 07 | ITO : Information Technology Officer | - 01 | CMA : Chief Management Assistant | - 02 | PA : Policy & Planning Assistant | - 01 |
| | | IA/DO Investigation Assistant or Development Officer | - 06 | RA : Research Assistant | - 01 | BA : Budget Assistant | - 01 |
| | | | | | | OES : Office Employee Service | - 15 |
| | | | | | | Drivers | - 04 |